தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

30.10.2013

**விவசாயிகளுக்கு தேவையான விதை இருப்பில் உள்ளது: ஆட்சியர்**

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேளாண் அலுவலகங்களில் விதை நெல், கடலை உள்ளிட்டவை போதுமான அளவு இருப்பில் உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது. இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் நெல் 193 ஹெக்டேரிலும், பயறு வகை பயிர்கள் 876 ஹெக்டேரிலும், கரும்பு 4,526 ஹெக்டேரிலும், மக்காச் சோளம் 48,065 ஹெக்டேரிலும், பருத்தி 30,587 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்து பயிர்கள் 801 ஹெக்டேரிலும் சாகுபடி செய்துள்ளனர். விவசாயிகளின் தேவைக்காக, நெல் 7 மெ. டன், நிலக்கடலை 47 மெ. டன் மற்றும் பயறுவகை பயிர்கள் 7.5 மெ. டன் உள்ளிட்ட விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி, தனியார் உரக் கடைகளில் உரங்கள் போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு தேவையான விதை மற்றும் உரங்களை பெற்று பயன்பெறலாம் என்றார் அவர்.

**தீவனப்பயிர்களில் விதை உற்பத்தி வழிமுறைகள்**

தீவனப் பயிர்களில் விதை உற்பத்தி மற்றும் விதைச்சான்று பெறும் வழிமுறைகள் குறித்த இலவச பயிற்சி நாமக்கலில் நவம்பர் 7-ம் தேதி அளிக்கப்பட உள்ளது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் அன்று காலை 9 மணிக்கு நடக்க உள்ள இந்த பயிற்சி முகாமில், கறவை மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு ஏற்ற தீவனப்பயிர்கள், மண்ணின் தன்மைக்கேற்ற தீவனப்பயிர்கள், விதை உற்பத்தியில்

புதிய ரகங்கள், விதை நேர்த்தி செய்யும் முறைகள், விதை அளவு, பயிர் இடைவெளி, பயிர் விலகு தூரம், விதைப்பு செய்தல், உரமிடுதல், நவீன நீர்ப்பாசன முறைகள், விதை அறுவடை செய்யும் முறைகள், விதை சுத்திகரிப்பு மற்றும் விதை சான்று பெறும் முறைகள், மரவகை தீவனப்பயிர்களில் நாற்றுகள் உற்பத்தி செய்யும் முறைகள் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் இந்த பயிற்சியில் பங்கேற்று பயன்பெறலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நவம்பர் 6-ம் தேதிக்குள் தங்கள் பெயரை பதிவு செய்திட வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கரும்பு அரவைத் திறனில் உயர் தொழில்நுட்பம்: துணைவேந்தர் கு.ராமசாமி வலியுறுத்தல்**

கரும்பு அரவைத் திறனில் பிரேசில் நாட்டைப் போல இந்தியாவிலும் உயர் தொழில்நுட்பங்களை புகுத்த முன்வர வேண்டும் என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி வலியுறுத்தினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், கரும்பு மற்றும் திசு வளர்ப்பு வாழைக்கான உயர் சாகுபடி தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பிலான கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடந்தது. மாநிலத்தில் இருந்து சுமார் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலையைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

இதில், துணைவேந்தர் கு.ராமசாமி பேசியது: விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் கரும்பில் இருந்து சர்க்கரை மட்டுமின்றி இதர பொருள்களான பிரஸ்மட், எரிசாராயம், கம்போஸ்டு உரங்கள் ஆகியவையும் சர்க்கரை ஆலைகளால் தயாரிக்கப்படுகின்றன.சர்க்கரை அளவை மட்டும் கருத்தில் கொள்ளாமல் உபபொருள்களையும், அதனால் பெறப்படும் நன்மையையும் கருத வேண்டும்.எனவே, கரும்பு விலையை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளையும்,

கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கான குறைந்தபட்ச லாபத்தையும் பெற்றிடும் வழிகளையும் சர்க்கரை ஆலைகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிரேசில் நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகள் நவீன உத்திகளைக் கொண்டு கரும்பு அரவைத் திறனை சிறப்பாக ஈட்டுவது போல் இந்தியாவிலும் உயர் தொழில்நுட்பங்களை புகுத்த தொழிலகங்கள் முன்வர வேண்டும்.தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 16க்கும் மேற்பட்ட கரும்பு ரகங்களை வெளியிட்டுள்ளது. ஆனாலும் சில கரும்பு ரகங்களையே சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு பரிந்துரை செய்கின்றன.

எனவே, புதிய ரகங்களையும் அதற்கான அனைத்து தொழில்நுட்பங்களையும் அந்தந்த பகுதிக்கு ஏற்றாற் போல் விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் பரிந்துரை செய்ய வேண்டும்.

கரும்பில் 2 முதல் 4 மறுதாம்பு பயிர்களை விட்டு அறுவடை செய்வதால் அதிக உற்பத்தித் திறன் அடைய வாய்ப்புள்ளது. சர்க்கரை ஆலைகளும், விவசாயிகளும் இணைந்து செயல்பட்டால்தான் கரும்பில் அதிக உற்பத்தித் திறன் அடைய முடியும் என்றார்.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் இணைப் பதிவாளர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆர்.ஆனந்தி, சக்தி சுகர்ஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் ந.செழியன், வேளாண்மைப் பல்கலைக்கழக நீர் நுட்ப மைய இயக்குநர் பி.ஜே.பாண்டியன், நாகார்ஜுனா ஃபெர்டிலைசர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் விற்பனை மேம்பாட்டு தலைவர் விஜய் வீர்சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பவானிசாகர் அருகே வாழைகளைச் சேதப்படுத்திய யானை**

பவானிசாகர் அருகே அம்மாபாளையம் கிராமத்தில் புகுந்த ஒற்றை யானை, 100-க்கும் மேற்பட்ட வாழைகளைச் சேதப்படுத்தியது.

பவானிசாகர் வனச் சரகத்திற்கு உள்பட்ட விளாமுண்டி வனப் பகுதியில் ஏராளமான யானைகள் உள்ளன. இந்த யானைகள் தினமும் இரவில் வனத்தைவிட்டு வெளியேறி வனப் பகுதியையொட்டி அமைந்துள்ள கோடேபாளையம், அம்மாபாளையம், வெள்ளாளபாளையம், நால் ரோடு,

அண்ணா நகர், சொலவனூர், தொப்பம்பாளையம், கரிதொட்டம்பாளையம் கிராமங்களில் புகுந்து விவசாயப் பயிர்களைச் சேதப்படுத்தி வருகின்றன.

இந் நிலையில், செவ்வாய்க்கிழமை அதிகாலையில் விளாமுண்டி வனத்தைவிட்டு வெளியேறிய ஒற்றை யானை, அம்மாபாளையம்-மேட்டுப்பாளையம் சாலையையொட்டி உள்ள விவசாயி பழனிசாமியின் தோட்டத்திற்குள் புகுந்து அறுவடைக்குத் தயாராக இருந்த கதளி ரக வாழைகளைத் தின்றும் மிதித்தும் சேதப்படுத்தியது. வனத் துறையினர் மற்றும் பக்கத்து தோட்டக்காரர்கள் பட்டாசு வெடித்தும், தீப் பந்தங்களைக் காட்டியும் யானையை விரட்டினர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 70.55 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 70.55 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி.

அணைக்கு விநாடிக்கு 1,248 கன அடி நீர் வந்தது.

அணையில் இருந்து ஆற்றில் 300 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,000 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 11.19 டி.எம்.சி.

**நீலகிரி மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தை செயல்படுத்த நடப்பாண்டிற்கு ரூ.365 லட்சம் நிதி ஒதுக்கீடு**

நீலகிரி மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தை செயல்படுத்த நடப்பு நிதியாண்டிற்கு ரூ.365 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் மலர் சாகுபடியினை ஊக்குவித்தல், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல், வாசனை திரவிய பயிர் சாகுபடியை ஊக்குவித்தல், மனித வள மேம்பாடு போன்ற திட்டங்களுக்கு பல்வேறு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் நடப்பு நிதியாண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் பல்வேறு மானிய திட்டங்களை செயல்படுத்த ரூ.365 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத்துறையின் சார்பில் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள உத்தேச பட்டியலில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் வருமாறு:

உயர் தொழிற்நுட்ப பசுமைக்குடில் அமைக்க நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு விவசாயிக்கு 4,000 ச.மீ. பரப்பு வரை ச.மீருக்கு ரூ.477.50 மானியமாக வழங்க திட்டமிடப்பட்டு 30,000 ச.மீ பரப்பிற்கு மானியம் வழங்க தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின்கீழ் ரூ.140 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நடவு பொருள் மானியமாக ஒரு விவசாயிக்கு 500 ச.மீ.பரப்பு வரை 50 சத மானியமாக ரூ.250 வீதம் வழங்க 30,000 ச.மீ.பரப்பிற்கு ரூ.75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிலப்போர்வை அமைக்க ஒரு ஹெக்டேருக்கு 50 சத மானியமாக ரூ.10,000 வீதம் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஹெக்டேர் பரப்பிற்கு வழங்கப்படுகிறது. மொத்தம் 50 ஹெக்டேர் பரப்பிற்கு மானியமாக ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாற்றுகள் தயாரிப்பினை ஊக்குவிக்க நிழல்வலை கூடாரம் அமைக்க 50 சத மானியமாக ச.மீருக்கு ரூ.300 வீதம் வழங்க 5,000 ச.மீ.பரப்பிற்கு ரூ.15 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கில் மண்புழு கூடாரம் அமைக்க 50 சத மானியமாக ஒரு யூனிட்டிற்கு ரூ.30,000 வீதம் மொத்தம் 20 யூனிட்டுகளை அமைக்க ரூ.2.4 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. நிலப்பரப்பில் சிறிய அளவில் மண்புழு உர திடல்கள் அமைக்க 50 சத மானியமாக ரூ.5,000 வீதம் 20 திடல்களை அமைக்க ரூ.1 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூடலூர் வட்டாரத்தில் வாசனை திரவிய பயிர்களான இஞ்சி, கிராம்பு, ஜாதிக்காய் மற்றும் குருமிளகு பயிர் சாகுபடியை ஊக்குவிக்க நடவுப்பொருள் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை மேலாண்மை மேற்கொள்வதற்காக 50 சத மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது. இஞ்சி பயிர் சாகுபடிக்காக ஹெக்டேருக்கு ரூ.12,500 வீதமும், கிராம்பு, ஜாதிக்காய் மற்றும் குருமிளகு பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.20,000 வீதமும் மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இஞ்சி மற்றும் குருமிளகு பயிர்களில் தலா 250 ஹெக்டேர் பரப்பிற்கும், கிராம்பு மற்றும் ஜாதிக்காய் பயிர்களில் தலா 20 ஹெக்டேர் பரப்பிற்கும் மானியம் வழங்க ரூ.39 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அயல்மகரந்த சேர்க்கையை ஊக்குவித்தல் மற்றும் பண்ணை இயந்திரக் கருவிகள் பயன்பாட்டினை ஊக்குவித்தல் ஆகியவற்றுடன் மனிதவள மேம்பாடு திட்டங்களுக்கும் மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான பயிற்சி, மாநில அளவிலான பயிற்சி மற்றும் வெளி மாநில பயிற்சிகளுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டங்களின்கீழ் பயனடைய நீலகிரி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களிடம் நில உரிமை ஆவணம், குடும்ப அட்டையின் நகல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம் உள்ளிட்ட ஆவணங்களுடன் நேரில் அணுகி பயனடையலாம்.

**விவசாயிகளுக்கு இலவச உரம்**

மதுரை மாவட்டம் தே.கல்லுப்பட்டி ஒன்றிய விவசாயிகளுக்கு இலவசமாக உரங்கள் வழங்கப்படும் என வேளாண் உதவி இயக்குநர் செல்வன் கூறியுள்ளார்.

வேளாண் உதவி இயக்குநர் செல்வன் தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தே.கல்லுப்பட்டி ஒன்றிய விவசாயிகள் 325 பேருக்கு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கம்பு, சோளம், சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு ரூபாய் 3000 மதிப்புள்ள உரங்கள் இலவசமாக கொடுக்கப்படும். அதற்கு சிட்டா, மற்றும் அடங்கல் ஆகியவற்றை கொடுத்து அதற்கான மானியத்தை பெற்றுக்கொள்ளுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

**விவசாயப் பணிகளுக்கு தண்ணீர் வழங்க ரூ.12 கோடியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்**

விவசாயப் பணிகளுக்கு தண்ணீர் வழங்கும் வகையில், திருப்பத்தூர் தேர்வு நிலை பேரூராட்சியில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வரும் பணி மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை சுத்தப்படுத்தி தூளாக்கும் இயந்திரப் பணிகளை மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

திருப்பத்தூர் பேரூராட்சியில் நிலத்தடி நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ளதன் மூலம் பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இதிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் அட்டக்குளத்தில் சேகரமாகும் கழிவு நீரை சுத்திகரித்து, விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில் ரூ.12 கோடி மதிப்பீல் பேரூராட்சி அருகில் உள்ள உரக்கிடங்கில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் கழிவு நீரை சுத்திகரித்து விவசாயப் பணிகளுக்கு பயன்படுத்த முடியும்.

பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பெறப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை சுத்தம் செய்து அவற்றை தூளாக்கி தார்ச்சாலைக்கு பயன்படுத்தும் வகையில் ரூ.89,500 மதிப்பில் பிளாஸ்டிக் தூளாக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கவும், பிளாஸ்டிக்கை மறுசுழற்சி செய்து தார் சாலைகள் அமைப்பதற்கு பயன்படுத்தவும் முடியும் என்றார் ஆட்சியர்

**கீழ்திசை காற்று சாதகம்: தமிழகத்தில் மழை அதிகரிக்க வாய்ப்பு**

கீழ்திசை காற்று சாதகமாக வீசுவதால் தமிழகத்தில் வரும் நாள்களில் மழை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையத்தின் இயக்குநர் ரமணன் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

வடகிழக்கு பருவ மழை தொடங்கியதை அடுத்து மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் தற்போது மழை தொடர்ந்து பெய்வதற்கு சாதகமாக கீழ்திசை காற்று வீசி வருகிறது.

இதனால் வரும் நாள்களில் மழையின் அளவு அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

வானிலை முன்னறிவிப்பு: சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், ஈரோடு, நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் புதன்கிழமை (அக்டோபர் 30) பரவலாக மழை பெய்யக் கூடும்.

தமிழகத்தின் பிற மாவட்டங்களின் ஒரு சில இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழையளவு(மில்லி மீட்டரில்):

தருமபுரி மாவட்டம் அரூர் - 120, மகாபலிபுரம் - 40, வாணியம்பாடி, விருத்தாசலம், பெரம்பலூர், விழுப்புரம் - 30, தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, கள்ளக்குறிச்சி, தருமபுரி - 20.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.10.2013**

## துவரைக்கு இலவச சொட்டுநீர் பாசனம்

வடமதுரை: வடமதுரை வட்டாரத்தில் சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், சொட்டு நீர் பாசனம் முழுவதும் இலவசமாக அமைத்து தரப்பட உள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், துவரை பயிரிடும் விவசாயிகளுக்கு, ஒரு ஏக்கருக்கு இலவச சொட்டுநீர் பாசனம் அமைத்து தரப்படும். இத்திட்டத்தில் சேர விரும்பும் விவசாயிகள், சிட்டா, மண் மற்றும் பாசன நீர் மாதிரியுடன், தங்களது பகுதி உதவி வேளாண்மை அலுவலர்கள் அல்லது வடமதுரை வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி, தங்களது பெயரை பதிவு செய்யலாம், என வேளாண்மை உதவி இயக்குனர் ராணி தெரிவித்துள்ளார்.

## வங்கிகள் கடன் தர மறுப்பால் விவசாயிகள் கரும்புகளை பிற ஆலைகளுக்கு வழங்க திட்டம்

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் வங்கிகள் கரும்பு விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்க மறுப்பதால், நடப்பு ஆண்டு கரும்பு விளைச்சல் 3.5 லட்சம் டன்னாக குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. சிவகங்கை அருகே படமாத்தூர் சக்தி சர்க்கரை ஆலைக்காக,சிவகங்கை, காளையார்கோவில், திருப்புவனம் மற்றும் ராமநாதபுரத்தில் கமுதி, பரமக்குடியில், 12 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கரில், 15 ஆயிரம் விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்கின்றனர். நல்ல விளைச்சல் காலங்களில், ஆண்டிற்கு 5 லட்சம் டன் வரை, கரும்பு உற்பத்தி செய்யப்படும்.ஆண்டுதோறும் புதிய கரும்பு பயிர்களை நடவு செய்தல், நன்கு வளர்ந்த கரும்பு பயிர்களை காப்பாற்ற தேவையான உரங்கள் உட்பட பிற வேலைகளுக்கு, கூட்டுறவு, வர்த்தக வங்கிகள் மூலம்,பயிர் கடன்களை விவசாயிகள் பெற்று வந்தனர். விவசாயிகள் பெற்ற, கரும்பிற்கான கடன்

தொகையை, சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம் பிடித்தம் செய்து, வங்கிகளில் அந்தந்த விவசாயிகளின் கணக்குகளில் செலுத்த வேண்டும். கடந்த 2 ஆண்டுகளாக வர்த்தக வங்கிகளுக்கும், ஒரு ஆண்டாக கூட்டுறவு வங்கிகளுக்கும் என, ஒட்டு மொத்தமாக 39.5 கோடியை, சர்க்கரை ஆலை நிர்வாகம் செலுத்தவில்லை. இதனால், வங்கிகள், கரும்பு விவசாயிகளுக்கு, நடப்பு ஆண்டு பயிர் நடவு, விளைந்த பயிர்களை காக்க தேவைப்படும் உரங்கள் வாங்க, கடன் வழங்க மறுக்கின்றன.நடப்பாண்டில், புதிதாக கரும்பு பயிரிடும் திட்டத்தை விவசாயிகள் கைவிட்டுவிட்டனர். ஏற்கனவே, நடவு செய்த கரும்பு பயிர்கள் மூலம், 3.5 லட்சம் டன் மட்டுமே உற்பத்தி கிடைக்கும்.

விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் ரகுநாதன் கூறியதாவது: வங்கிகளுக்கு, கடன் பாக்கி உள்ளதால் பயிர் கடன் கிடைக்கவில்லை.இங்கு விளையும் கரும்புகளை அலங்காநல்லூர், அறந்தாங்கி சர்க்கரை ஆலைகளுக்கு விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளோம், என்றார். சக்தி சர்க்கரை ஆலை துணை தலைவர் ஆறுமுகம் கூறியதாவது: தீபாவளிக்குள், விவசாயிகளுக்கு வழங்கவேண்டிய பாக்கி தொகையை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில், வழங்கி வருகிறோம். தீபாவளிக்கு பின், வங்கிகளுக்கு செலுத்தவேண்டிய ரூ.39 கோடியை செலுத்தி விடுவோம். அதற்கு பின், விவசாயிகளுக்கு தடையின்றி பயிர் கடன் கிடைக்கும், என்றார்.

## நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டும் நெல்லையில் பாலாமடை பகுதி மக்கள் முற்றுகை

திருநெல்வேலி:நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை உடனடியாக திறக்க வலியுறுத்தி நெல்லையில் பாலாமடை பகுதி மக்கள் முற்றுகையிட்டனர். பாலாமடை மற்றும் சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பில் நெற் பயிர் பயிரிட்டு வருகின்றனர். இந்த நெல்லை விற்பனை செய்ய நேரடி நெல் கொள்முதல் நிலையம் வசதி இல்லாததால் குறைந்த விலைக்கு விவசாயிகளிடம் விற்பனை செய்ய வேண்டிய ‹ழ்நிலை ஏற்பட்டது. இதனை கருத்தில் கொண்டு இப்பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனையடுத்து இப்பகுதியில் இந்த நிலையத்தை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அனைத்து பணிகளும் முடிவடைந்த நிலையில் திடீரென

இந்த நெல் கொள்முதல் நிலையம் அமைக்கும் பணி நிறுத்தப்பட்டது.
இதனால் அதிருப்தி அடைந்த பாலமடை, ராஜவல்லிபுரம், அலங்காரபேரி, குப்பக்குறிச்சி பகுதிகளை சேர்ந்த மக்கள் பஞ்., தலைவர் சொக்கலிங்கம் தலைமையில் ஏராளமான மக்கள் நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் முற்றுகையிட்டனர்.
இதுகுறித்து விவசாயிகள் கூறும் போது, ""பாலாமடை பகுதியில் அரசின் நேரடி கொள்முதல் நிலையம் இல்லாததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதுதொடர்பாக கோரிக்கை விடுத்த நிலையில் அரசு நடவடிக்கை மேற்கொண்டது. ஆனால் திடீரென இந்த நிலையம் அமைக்கும் முடிவு கைவிடப்பட்டது. எனவே, உடனடியாக இந்த நிலையத்தை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றனர்.

### கருவந்தாவில் கால்நடை மருத்துவ முகாம்

வீரகேரளம்புதூர்:வீ.கே.புதூர் தாலுகா கருவந்தாவில் கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுதுறையின் சமுதாய வளர்ச்சிக்கான திட்டத்தின் கீழ் பாவூர்சத்திரம் வேலாயுதநாடார் பாலிடெக்னிக் கல்லூரியும், தமிழ்நாடு அரசு கால்நடைத்துறையும் இணைந்து ஏற்பாடு செய்த கால்நடை மருத்துவ முகாம் கருவந்தாவில் நடந்தது. வீராணம் கால்நடை டாக்டர் முருகையா தலைமை வகித்தார். திட்ட ஆலோசகர் முத்துகுட்டி, இளநிலை ஆலோசகர் கணபதிராமசுப்பிரமணியன், ஒன்றிய கவுன்சிலர் ஜெயக்குமார் முன்னிலை வகித்தனர்.

கால்நடை ஆய்வாளர்கள் உச்சிமாகாளி, சாமுவேல் சிகிச்சை அளித்தனர். 250க்கும் மேற்பட்ட மாடுகளுக்கு இலவச தடுப்பூசி, குடற்புழு நீக்குதல், சினை பரிசோதனை செய்யப்பட்டது. ஆடுகள், கோழிகள், நாய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஏற்பாடுகளை கருவந்தா விவசாய சங்க தலைவர் அரிரெங்கநாதன் மற்றும் சுந்தரம் பால்துரை செய்திருந்தனர்.

## வேளாண் சார்ந்த தொழிலுக்கு...மானியம் கிருஷ்ணகிரி கலெக்டர் தகவல்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் அனைத்து பகுதிகளில் அமைக்கப்படும் வேளாண்மை சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு, 25 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.
கலெக்டர் ராஜேஷ் வெளியிட்ட அறிக்கை:
தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் அனைத்து பகுதிகளிலும் அமைக்கப்படும் வேளாண் சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு அவற்றின் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மொத்த மதிப்பில், 25 சதவீதம் மானியமாக வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
இதன்படி குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு இயந்திர தளவாடங்கள் மதிப்பில், 25 சதவீதம் அதிகபட்சமாக, 6 லட்சத்து, 25 ஆயிரம் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.
விரிவாக்கம் மற்றும் மாற்று பொருட்கள் உற்பத்தி செய்ய கூடுதலாக மாற்று பொருட்கள் புது இயந்திரங்களின் மீதான முதலீட்டில், 25 சதவீதம் கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும். இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டில் முதல் ஆறு ஆண்டுகளுக்கு செலுத்தப்படும் நிகர மதிப்பு கூட்டு வரிக்கு ஈடான, 100 சதவீத மானியம் வழங்கப்படும்.
அடமானம் அல்லது பிணையமாக வைக்கப்பட்ட ஆவணங்களை பதிவு செய்வதற்கான முத்திரை கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்படம். மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொழிலில் பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டு பர்கூர், மத்தூர், ஊத்தங்கரை, வேப்பனப்பள்ளி, கெலமங்கலம், தளி, சூளகிரி, காவேரிப்பட்டணம் ஆகிய எட்டு வட்டாரங்களில் துவக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இயந்திர தளவாடங்களின் மதிப்பில், 25 சதவீதம் மானியம் அல்லது அதிகபட்சமாக, 30 லட்ச ரூபாய் வரை மானியமாக வழங்கப்படும்.

உற்பத்தி துவங்கி முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் குறைந்த பட்சம், 25 வேலையாட்களை மூன்று ஆண்டுகள் பணியில் ஈடுபடுத்தும் நிறுவனங்களின் இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் மதிப்பில் ஐந்து சதவீதம் அதிகபட்சமாக, 5 லட்ச ரூபாய் கூடுதல் முதலீட்டு மானியமாக வழங்கப்படும்.

மகளிர், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் , மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கையர் ஆகிய பிரிவை சேர்ந்த தொழில் முனைவோர்கள் அமைக்கும் தொழில் நிறுவனங்களின் இயந்திர தளவாடங்கள் முதலீட்டில் தகுதியின் அடிப்படையில் ஐந்து சதவீதம் அதிகபட்சமாக, 2 லட்ச ரூபாய் கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

மேலும், வகை உற்பத்தி நிறுவனங்களான, மின் மற்றும் மின்னணு பொருட்கள், தோல் மற்றும் தோல் பொருட்கள், வாகன உதிரிபாகங்கள், மருந்து மற்றும் மருந்து பொருட்கள், சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள், ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள், மாசுக்கட்டுப்பாட்டு சாதனங்கள், விளையாட்டு பொருட்கள், சிக்கன அடக்க விலை கட்டுமான பொருட்கள், ஆயத்த ஆடைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குறு மற்றும் சிறு உற்பத்தி நிறுவனங்களின் இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டு மதிப்பில் தகுதியின் அடிப்படையில், 25 சதவீதம் அதிகபட்சமாக, 30 லட்ச ரூபாய் சிறப்பு மூலதன மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டை: அங்கன்வாடிகள் தனியார்மயமாவதை கண்டித்து, விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

புதுக்கோட்டையில் விவசாயிகள் சங்கம் சார்பில், அங்கன்வாடி மையங்களை தனியார் மயமாக்கும், மத்திய அரசின் முடிவை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது. புதிய பஸ்ஸ்டாண்ட் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாநில செயலாளர் சண்முகம் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் செபஸ்தியான், செயலாளர் பொன்னுச்சாமி, விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் சங்கர், மாதர்

சங்க மாவட்டத்தலைவர் விமலா, செயலாளர் சலோமி, துணைத்தலைவர் கண்ணம்மா உட்பட சங்க நிர்வாகிகள் மற்றும் விவசாய கூலித்தொழிலாளர்கள் பலர் பங்கேற்றனர்.

நாடு முழுவதும் உள்ள அங்கன்வாடி மையங்களை தனியார் மயமாக்கினால், அவற்றை நம்பியுள்ள, 27 லட்சம் அங்கன்வாடி ஊழியர்கள் வேலை வாய்ப்பை இழக்கும் சூழ்நிலை உருவாகும் என்பதால், இந்த முடிவை கைவிடவேண்டும் என, மத்திய அரசை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தின் போது கோஷம் எழுப்பப்பட்டது.

### வெங்காயத்தை நெருங்குது தக்காளி

பழநி: மழை இன்றி, விளைச்சல் பாதிக்கப்பட்டு, வெங்காயத்தை போல தக்காளி விலையும் உயர்ந்து வருகிறது. திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழநி, உடுமலைபேட்டை, பொள்ளாச்சி பகுதிகளில், ஏராளமான விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்கின்றனர். இங்கு விளைவிக்கப்படும் தக்காளி, கேரளா, ஆந்திரா, கோல்கட்டா போன்ற பகுதிகளுக்கு, ஒசூர் மார்க்கெட் மூலம் அனுப்பப்படுகிறது. மழையில்லாததால், தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டு வரத்து குறைந்துள்ளது. கடந்த மாதம், ஒரு கிலோ, 50 ரூபாய்க்கு விற்கப்பட்டது; தற்போதைய விலை, 70 ரூபாய். தீபாவளியை முன்னிட்டு, விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. வெங்காயத்தின் விலை, 80 ரூபாயை எட்டியுள்ள நிலையில், தக்காளியும், அதை நெருங்கி வருகிறது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 30.10.2013

### விவசாயிகளுக்கு மிளகாய் சாகுபடி பயிற்சி

பரமக்குடி, : பரமக்குடி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு மிளகாய் சாகுபடி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் பரமக்குடி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் பரளையாறு உபவடிவ நிலப்பகுதிக்கான நீர், நிலவளத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2013-14ம் ஆண்டிற்கான திட்ட செயல்பாடுகளில் மிளகாய் சாகுபடியில் உயர் தொழில்நுட்ப செயல்விளக்கத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி அளிக்கப்பட்டது. மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் நாற்றங்கால் உற்பத்தியில் மிளகாய் சாகுபடி குறித்து உதவி பேராசிரியர் ஜெயஸ்ரீனிவாஸ் விளக்கம் அளித்தார். மிளகாய் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து தலைவர் சக்திவேல் பேசினார். மிளகாய் பயிரில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் குறித்து இளநிலை ஆராய்ச்சியாளர் முருகன் விளக்கம் அளித்தார். கலந்துரையாடலில் மிளகாய் சாகுபடியில் பயனாளிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இளநிலை ஆராய்ச்சியாளர் அருணாதேவி நன்றி கூறினார்.

### பயிர் பரப்பு விரிவாக்கம் செய்ய இடுபொருட்களுக்கு விநியோகம்

ராமநாதபுரம், : மா, மிளகாய், கொத்தமல்லி பயிர்கள் விவசாயம் செய்யும் பரப்புகளை விரிவாக்கம் செய்வதற்கு மத்திய அரசு பங்களிப்புடன் மானிய விலையில் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கங்காதரன் தெரிவித்தார்.

தேசிய தோட்டக்கலை இயக்கம் மத்திய அரசு பங்களிப்புடன் 50 சதவீதம் 70

சதவீதம் மானியத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் மா, மிளகாய், மற்றும் கொத்தமல்லி பயிர்கள் பரப்பு விரிவாக்கத்திற்கு மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. 2011-12ம் ஆண்டு சுமார் ரூ.3 கோடியே 81 லட்சம் செலவில் 4,732 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். 2012-13ம் ஆண்டில் 350 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 500 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

தேசிய நுண்ணீர் பாசன இயக்கத்தின் கீழ் நிலங்களில் சொட்டுநீர் பாசன அமைப்பு நிறுவ விவசாயிகள் பயன்பாட்டிற்கு ஏற்ப 75 முதல் 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. 2011-12ம் ஆண்டில் ரூ.37.24 லட்சம் செலவிடப்பட்டு 87 ஹெக்டேர் பரப்பில் சொட்டுநீர் பாசன அமைப்பு நிறுவப்பட்டது. இதன் மூலம் 80 விவசாயிகள் பயன்பெற்றனர். நடப்பு 2012-13 ஆண்டில் ரூ.42.77 லட்சம் செலவில் 100 ஹெக்டேர் பரப்பில் சொட்டுநீர் பாசன வசதி மூலம் 95 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ திருஉத்திரகோசமங்கை, கீழ்குண்டாறு, பாலாறு, பரளையாற்றின் பாசனப்பகுதிகள் தோட்டக்கலை பயிர்களின் பரப்பு விரிவாக்கத்திற்காக கடந்த 2011-22 ஆண்டில் ரூ.122. 83 லட்சம் செலவில் 1,513 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். நடப்பு ஆண்டில் ரூ.47.38 லட்சம் செல்வில் 1,412 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

**சூறைக்காற்றால் 28 ஆயிரம் வாழைகள் நாசம் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசுக்கு பரிந்துரை கலெக்டர் தகவல்**

தூத்துக்குடி, : தூத்துக்குடி மாவட்டத்தில் முதல்கட்ட கணக்கெடுப்பின் படி 28ஆயிரம் வாழைகள் சூறைக்காற்றால் சேதமடைந்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று வாராந்திர மக்கள் குறைதீர்க்கும்

நாள் கூட்டம் நடந்தது. பின்னர் கலெக்டர் ரவிக்குமார் நிருபர்களிடம் கூறியதாவது: தூத்துக்குடி மாவட்டத்தில் எட்டயபுரம், சாத்தான்குளம், விளாத்திக்குளம் தாலுகா அலுவலகங்களில் அரசின் விரைவு பட்டா மாறுதல் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. எட்டயபுரத்தில் பெறப்பட்ட 490 மனுக்களில் 360 மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டுள்ளது.

. 1970, 1980ம் ஆண்டுகளிலுள்ள நிலம் தொடர்பான பிரச்னை களுக்கும் இதன்மூலமாக உரிய தீர்வு காணப்பட்டுள்ளது. முகாமில், நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்தும் மனுக்கள் பெறப்படுகின்றன. இதில் குறைபாடுகள் இருப்பின் பொதுமக்கள் இம்முகாமில் பங்கேற்று புதியதாக மனு கொடுக்கலாம். தவறாக ஒருவருக்கு உரிய நிலம் மற்றவர் பெயரில் இருக்கும் பட்சத்தில் அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருப்பின் இதில் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் உடனடியாக எடுக்கப்படும். வரும் 31ம் தேதி ஸ்ரீவைகுண்டம் தாலுகாவில் விரைவு பட்டா மாறுதல் முகாம் நடக்கிறது.

மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஸ்ரீவைகுண்டம் சுற்றுவட்டார பகுதிகளில் வீசிய சூறைக்காற்றினால் வாழைகள் முறிந்து சேதமானது தொடர்பாக வருவாய்த்துறை அதிகாரிகள் மூலமாக கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் கட்டமாக அளிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பின் முடிவில் 28ஆயிரம் வாழைகள் முறிந்து சேதமாகியுள்ளது தெரியவந்துள்ளது.

தொடர்ந்து நடந்துவரும் இப்பணிகள் அனைத்தும் முழுவதுமாக முடிக்கப்பட்ட பின்னர் இதுகுறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பபட்டு நிவாரணம் கொடுப்பதற்காக பரிந்துரைக்கப்படும்.

மாவட்டத்தில் நடந்த புதிய வாக்காளர் சேர்ப்பில் இதுவரை 60ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணபங்கள் பெறப்பட்டுள்ளது. வரும் 30ம் தேதி வரை இதற்கான மனுக்களை கொடுக்கலாம் என்றார்.

பேட்டியின்போது மாவட்ட வருவாய் அலுவலர் முத்து மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**மேட்டூர் நீர்மட்டம் 85.23 அடியானது**

மேட்டூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்துள்ளதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை அணைக்கு வினாடிக்கு 7833 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 8 மணி நிலவரப்படி வினாடிக்கு 6332 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து பாசனத்திற்காக வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுகிறது. நீர்வரத்தை விட பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், நேற்று முன்தினம் 85.88 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 85.23 அடியாக குறைந்தது.

**வெங்காயம் விலை உயர்வு நீடிக்கிறது**



புதுடெல்லி : வெங்காயம் விலை வடமாநிலங்களில் பெரும் பிரச்னையை ஏற்படுத்தி வருகிறது. நாடு முழுவதும் பரவலாக வெங்காயம் விலை உயர்ந்தே காணப்படுகிறது. புதிய வெங்காயம் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால், மொத்த விற்பனை விலை ஓரளவு குறையத் தொடங்கியுள்ளது. இருந்தபோதிலும், சில்லரை விற்பனையில் விலை குறையவில்லை. பல நகரங்களில் தொடர்ந்து கிலோ ரூ.90க்கு விற்கப்படுகிறது.

அக்ரா, ராஜ்கோட், விஜயவாடா, ஐதராபாத் ஆகிய நகரங்களில் மொத்த விற்பனையில் வெங்காயம் கிலோ ரூ.42 முதல் ரூ.45க்கு விற்கப்படுகிறது. இந்த சூழ்நிலையில், வரத்து கணிசமாக அதிகரிப்பதால் தீபாவளிக்கு பின்னர் விலை

படிப்படியாக குறையும் என்று மத்திய நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகமும், சந்தை நிபுணர்கள், வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஜம்மு,காஷ்மீரில் கிலோ ரூ.90, டெல்லியில் கிலோ ரூ.80, ஹிசார், வாரணாசி, லக்னோ, அமிர்தசரஸ் ஆகிய நகரங்களில் கிலோ ரூ.70 முதல் ரூ.75க்கு விற்கப்படுகிறது. நாட்டின் மற்ற பகுதிகளில் குறைந்தபட்ச விலை ரூ.45 ஆக உள்ளது. அதிகபட்சமாக கிலோ ரூ.70 முதல் ரூ.80க்கு விற்கப்படுகிறது. மகாராஷ்டிரா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலிருந்து டெல்லிக்கு வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அடுத்த சில தினங்களில் விலை குறையத் தொடங் கும் என்று அரசின் தேசிய தோட்டக்கலை ஆய்வு நிறுவனத்தின் (என்எச்ஆர்டிஎப்) இயக்குநர் ஆர்.பி. குப்தா தெரிவித்தார்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய வெங்காயம் மொத்த விற்பனை சந்தையான மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள லாசல்கானில் கடந்த 10 தினங்களில் மொத்த விற்பனை விலையில் கிலோவுக்கு ரூ.20 முதல் ரூ.32.30 வரையில் குறைந்துள்ளது. மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் காரீப் பருவ சாகுபடியில் வெங்காயம் அறுவடை நடந்து வருகிறது. ஆனால், மழையால் பாதிப்பு ஏற்பட்டு வெங்காயத்தின் வரத்து குறைந்தது. இது பிரச்னையை அதிகரித்துவிட்டது.

வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. ஏற்றுமதியை கட்டுப்படுத்தியது. இறக்குமதிக்கு அனுமதி அளித்தது. அரசின் நாபெட் கூட்டுறவு அமைப்பு, பாகிஸ்தான், பங்களாதேஷ், எகிப்து, உள்பட பல் நாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்வதற்கு டெண்டர் கோரியிருந்தது. இந்த டெண்டர் இன்று திறக்கப்படுகிறது. புதிய வெங்காயம், இறக்குமதி வெங்காயம் வரத்து அதிகரித்ததும் விலை கணிசமாக குறையும். இதுஎல்லாம் அடுத்த 2,3 வாரங்களில் நடக்கும் என்று

தெரிகிறது.

வெங்காயம் விலை விவரம் கி / ரூ.

| ஊர்கள் | சின்ன வெங்காயம் | | பெரிய வெங்காயம் | |
|---|---|---|---|---|
| | சில்லரை | மொத்தம் | சில்லரை | மொத்தம் |
| சென்னை | 90 | 80 | 75 | 65 |
| சேலம் | 70 | 65 | 65 | 45 |
| திருச்சி | 80 | 70 | 70 | 60 |
| மதுரை | 70 | 65 | 60 | 55 |
| நெல்லை | 80 | 70 | 60 | 50 |
| கோவை | 80 | 70 | 60 | 50 |

## இன்றைய வேளாண் செய்திகள்

## 30.10.2013

### அரசு பண்ணை குட்டை அமைத்து மீன் வளர்ப்பு தீவிரம்

பதிவு செய்த நாள் : Oct 30 | 04:21 am



லாலாபேட்டை,

தமிழக அரசின் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் பல் நோக்கு பண்ணை குட்டை அமைக்கும் பணியில் லாலா பேட்டை காஞ்சிநகரில் ஒரு விவசாய தோட்டத்தில் அரசின் சார்பில் மீன் வளர்க்க பண்ணை குட்டை அமைக்கப்பட்டு அதில் மீன் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

மீன் வளர்ப்பு பண்ணை குட்டைஅமைக்க விவசாயி விரும்பினால் அதற்கு ஏற்ற நிலத்தை காட்ட வேண்டும். இதையடுத்து அரசு 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத் தின் கீழ் பண்ணை குட்டை அமைத்து கொடுக்கும். அந்த பண்ணை குட்டை 15 மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும், 1.5 மீட்டர் உயரமும் கொண்டதாக அமைக்கப்படும். குட்டைக்கு தேவையான தண்ணீரை ஆழ்குழாய் அமைத்து அதன் மூலமோ அல்லது கால்வாய் தண்ணீரையோ விவசாயி பாய்ச்சி

கொள்ள வேண்டும். பண்ணை குட்டைக்கு அரசு மீன் வளர்ச்சி துறை சார்பில் கட்லா, ரோகு, மிருகால் போன்ற வகையை சேர்ந்த 225 மீன் குஞ்சுகள் வழங்கப்படுகிறது. அதற்கான தீவன பொருட்கள் கடலை புண்ணாக்கு, தவிடு ஆகியனவும், மீன் பிடி வலையும் மீன் வளர்ச்சி துறை இலவசமாக வழங்குகிறது.

இந்த மீன் பண்ணை குட்டைகள் கரூர் மாவட்டத்தில் 12 இடத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. இத்தகைய பண்ணை குட்டை மூலம் அருகாமையில் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் உயருகிறது.ஆழ்குழாய் நீரோட்டம் தக்க வைக்கிறது. மீன் மூலம் விவசாயிக்கு உபரி வருமானம் கிடைக்கிறது. மீன் பண்ணை குட்டை குறித்து விவசாயி கதிர்வேல் கூறியதாவது:–

இத்தகைய மீன் பண்ணைக் குட்டை அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு சுற்றுப்புற விவசாய நிலங்களுக்கு நீர் பிடிப்பு அதிகரித்து எப்போதும் வறட்சி இன்றி நீர் நிலை பெருகுகிறது. மேலும் மீன் பண்ணை அமைப்பதினால் அதன் சுற்று புறங்களில் கால் நடைகளுக்கு தேவையான தீவன புல்கள் நன்கு வளர்கிறது. மீன் விற்பனையில் லாபம் கிடைக்கிறது. இதனால் அரசுக்கு வறட்சி நிவாரண தொகை வழங்கும் சுமை குறைகிறது.

மேலும் விவசாயிகளுக்கு இயற்கை சீற்றங்களால் சில சமயங்களில் பாதிப்பு ஏற்படுகிறது. ஆனால் மீன் பண்ணை அமைப்பதால் பல வகையில் லாபம் கிடைக்கிறது. மீன் குட்டையில் மீன்களை பிடித்த பின்னர் அந்த தண்ணீர் விவசாய நிலங்களில் பாய்ச்சப்படுகிறது. இதனால் நல்ல உரம் பயிர்களுக்கு கிடைத்து நல்ல மகசூல் கிடைக்கிறது. இவ்வாறு விவசாயி கூறினார்.